# படிவம் 8ஏ

*(13(4) மற்றும் 26–ஆவது விதிகளைப் பார்க்கவும்)*

முகத்தின் முழுமையான முன்புறத் தோற்றத்தைக் காட்டுகின்ற, கடவுச் சீட்டு அளவுள்ள (3.5செ.மீ X 3.5 செ.மீ) சமீபத்திய புகைப்படம் ஒன்றினை கட்டத்திற்குள் ஒட்டுவதற்கான இடம்

## *வாக்காளர் பட்டியலில் பதிவை இடம்மாற்றுதலுக்கான விண்ணப்பம்*

பெறுநர்
வாக்காளர் பதிவு அதிகாரி,
____________________ சட்டமன்றத் தொகுதி

ஐயா,

மேற்குறிப்பிட்ட தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள* எனது / * கீழ்க்கண்ட நபரின் பதிவை தகுந்த பாகத்தில் இடமாற்றுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். பதிவை இடமாற்றுதல் செய்வதற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| **I.** பதிவு இடம்மாற்றுதல் செய்யப்படவேண்டிய நபரின் விவரங்கள்: | *** பெயர் | | *** குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
| பெயர் ஆங்கிலத்தில் | | | |
| பெயர் தமிழில் | | | |
| | வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ள பாகத்தின் எண்: | அந்த பாகத்தில் அவரது வரிசை எண்: | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (வழங்கப்பட்டிருந்தால்) எண்: |

| | | |
|---|---|---|
| * தகப்பனாரின் / தாயாரின் / கணவரின் | *** பெயர் | *** குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
| பெயர் ஆங்கிலத்தில் | | |
| * தகப்பனாரின் / தாயாரின் / கணவரின் பெயர் தமிழில் | | |

| | | |
|---|---|---|
| **II.** தற்போது சாதாரணமாக குடியிருந்து வரும் இடத்தின் விவரங்கள் (முழுமையான முகவரி) : | | |
| வீட்டு / கதவு எண் → புதிய: | பழைய: | |
| அடுக்குமாடி குடியிருப்பின் / கட்டிடத்தின் பெயர்: | | |
| தெரு / பகுதி / இடம் / சாலை : | | |
| நகரம் / கிராமம்: | | |
| அஞ்சல் அலுவலகம்: | அஞ்சல் குறியீட்டு எண்: | |
| வட்டம் / மண்டலம்: | | |
| மாவட்டம் : | | |
| **III.** விண்ணப்ப நாளில் மேற்குறிப்பிட்ட முகவரியில் தொடர்ந்து குடியிருந்து வரும் விவரங்கள் | ஆண்டுகள் | மாதங்கள் |
| **IV.**பதிவு இடம்மாற்றப்பட வேண்டிய பாகத்தின் எண் (தெரிந்திருந்தால்) : | | |

| | | | |
|---|---|---|---|
| **@V.** விண்ணப்பதாரரின் விவரங்கள்: | *** பெயர் | | *** குடும்பப்பெயர் (ஏதேனுமிருப்பின்) |
| | | | |
| | வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டுள்ள பாகத்தின் எண் : | அந்த பாகத்தில் அவரது வரிசை எண் : | வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (வழங்கப்பட்டிருந்தால்) எண் : |

*குறிப்பு* : எவராவது பொய்யான அல்லது பொய்யானதென்று தாம் அறிந்துள்ள அல்லது நம்புகிற அல்லது உண்மையானதென்று நம்பாத அறிக்கையை அல்லது உறுதிமொழியை கொடுத்தால் அவர் 1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (1950ன் 43) 31வது பிரிவின்கீழ்த் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

*** வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் பெயர் சரியாக இடம் பெறுவதற்கு ஏதுவாக பெயரை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதவும்.

* பொருத்தமற்றவைகளை அடித்து விடவும்.

@ விண்ணப்பதாரர் தன்னைப்பற்றிய பதிவை நீக்கக்கோருவதாயிருந்தால் பகுதி V–ஐ நிரப்பக்கூடாது.

**VI. உறுதிமொழி**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரிந்த வரையிலும், நம்பிக்கைக்கு உகந்த வகையிலும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

இடம் : நாள் : விண்ணப்பதாரின் கையொப்பம் / கைபெருவிரல் அடையாளம்

**மேல் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரங்கள்**
*(தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது)*

வாக்காளர் பட்டியலில், தன்னுடைய / திரு / திருமதி / செல்வி....................................................
தொடர்பான பதிவை இடம்மாற்றுதலுக்கான, திரு / திருமதி / செல்வி....................................................
யின் படிவம் 8ஏ ஏற்றுக்கொள்ளப்பட்டது* , நிராகரிக்கப்பட்டது.*

[விதி 26(4)ன்கீழ்] ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது நிராகரிக்கப்பட்டதற்கான விவரமான காரணங்கள்:

இடம்:
நாள்:

வாக்காளர் பதிவு அதிகாரியின் கையொப்பம்

வாக்காளர் பதிவு அதிகாரியின் முத்திரை

*பொருத்தமற்றதை அடித்து விடவும்.

---

**கள அலுவலர் (வாக்குச் சாவடி நிலை அலுவலர், நிர்ணயிக்கப்பட்ட அலுவலர், மேற்பார்வை அலுவலர்) – களின் குறிப்புகள்**

## படிவம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை

திரு./திருமதி/செல்வி**...............................................................................இடமிருந்து படிவம் 8ஏ பெற்றுக் கொள்ளப்பட்டது.
** முகவரி..........................................................................................

நாள்......................................

வாக்காளர் பதிவு அதிகாரி சார்பில் படிவம்
பெற்றுக் கொண்ட அதிகாரியின் கையொப்பம்

(முகவரி) ..........................................................................................

** விண்ணப்பதாரரால் நிரப்பப்படவேண்டும்

..........................................................................................

## படிவம் 8ஏ–ஐ நிரப்புவதற்கான வழிமுறைகள்

பொதுவான அறிவுரைகள்

*படிவம் 8ஏ–ஐ யார் தாக்கல் செய்யலாம் ?*

1. நடப்பிலுள்ள வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டுள்ள ஒரு நபர், அதே தொகுதியில் வேறொரு இடத்தில் செய்யப்பட்டுள்ள ஒரு பதிவினை இடம் மாற்றுவதற்காக இவ்விண்ணப்பத்தினை தாக்கல் செய்யலாம்.

*எப்போது படிவம் 8ஏ அளிக்கப்படலாம் ?*

1. ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் வரைவுப் பட்டியலாக வெளியிடப்பட்ட பின்பு, ஒருவர் அதிலுள்ள தம்மைக் குறித்த பதிவையோ, வேறொருவர் குறித்த பதிவையோ, அதே தொகுதிக்குள் வேறொரு இடத்திற்கு இடம்மாறுதல் செய்ய விண்ணப்பிக்கலாம். இதற்காக வரையறுக்கப்பட்டுள்ள நாட்களுக்குள் இவ்விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறும் காலங்களில் படிவத்தை தாக்கல் செய்யும் காலஅளவு குறித்து உரிய அளவில் விளம்பரம் செய்யப்படும்.
2. விண்ணப்பத்தின் ஒரே ஒரு பிரதியை மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும்.
3. அதே தொகுதிக்குள் பெயரை இடம்மாறுதல் செய்ய விண்ணப்பத்தினை, வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறாத காலங்களில் கூட, ஆண்டு முழுவதும், தாக்கல் செய்யலாம். வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறாத காலங்களில் விண்ணப்பம் இரண்டு பிரதிகளாக தாக்கல் செய்யப்பட வேண்டும்.

*படிவம் 8ஏ–ஐ எங்கே தாக்கல் செய்வது ?*

1. திருத்தப்பணி நடைபெறும் காலத்தில் விண்ணப்பத்தை வரைவு வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் வாக்குச்சாவடி அமைவிடங்கள் / அஞ்சலகங்கள்) மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களிலும் தாக்கல் செய்யலாம்.
2. வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடைபெறாத, ஆண்டின் மற்ற காலங்களில் விண்ணப்பத்தை வாக்காளர் பதிவு அதிகாரியிடமோ, குறிப்பிட்ட மற்ற அலுவலகங்களிலோ தாக்கல் செய்யலாம்.

*படிவம் 8ஏ–ஐ எப்படி நிரப்புவது ?*

1. பதிவை எந்தத் தொகுதிக்குள் இடம்மாற்றம் செய்யக் கோரப்படுகிறதோ அத்தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பத்தை முகவரியிடவேண்டும். காலியாக உள்ள இடத்தில் தொகுதியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
2. விண்ணப்பத்தின் பகுதி I-இல் பெயர், ஏற்கெனவே பதிவு இடம்பெற்றுள்ள வாக்காளர் பட்டியலின் பாகம் எண், வரிசை எண், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் (முழுமையாக) மற்றும் (வாக்காளர் பட்டியலில் அச்சிடப்பட்டுள்ளவாறு) உறவினர் பெயர் ஆகியவை நிரப்பப்பட வேண்டும்.
3. விண்ணப்பத்தின் பகுதி II-இல் நீங்கள் (அல்லது) தொடர்புடைய நபர், சாதாரண இருப்பிடத்தை தொகுதிக்குள் எந்த முகவரிக்கு மாற்றியுள்ளீர்கள் / மாற்றியுள்ளாரோ அதை முழுமையாகக் குறிப்பிட வேண்டும் தயவு செய்து முகவரியை அரைகுறையாக எழுத வேண்டாம். ஏனென்றால் வாக்காளர் பட்டியலின் எந்தப் பாகத்திற்கு இடம்மாற்றம் செய்யக் கோரப்படுகிறதோ அந்தப் பாகத்துடன் முகவரியை தொடர்புபடுத்த இயலாமல் போகலாம்.
4. விண்ணப்பத்தின் பகுதி III-இல், பகுதி II-இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய முகவரியில் நீங்கள் தொடர்ந்து குடியிருந்து வரும் தோராயமான கால அளவைக் குறிப்பிடவும்.
5. பகுதி IV-இல், நீங்கள் குடிபெயர்ந்துள்ள புதிய பகுதியில் வசிப்பவர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ள வாக்காளர் பட்டியலின் பாகத்தின் எண்ணை எழுதவும். இதைப் பூர்த்தி செய்வது உங்கள் விருப்பத்திற்குட்பட்டது. ஒருவேளை வாக்காளர் பட்டியல் பாகத்தின் எண் உங்களுக்குத் தெரியவில்லை என்றால் இதைக் காலியாகவிடவும்.

மனுதாரர் தம்மைக் குறித்த பதிவை இடம்மாறுதல் செய்யக் கோருவதாயிருந்தால் பகுதி V-ஐ நிரப்பக் கூடாது. விண்ணப்பதாரர் வேறொரு நபரின் பதிவை இடம்மாறுதல் செய்யக் கோருவதாயிருந்தால் இந்தப் பகுதியை நிரப்ப வேண்டும்.